DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 132/2022

Prosecution witness – PW.3

| | | |
|---|---|---|
| Name | :திரு. ஆறுமுகம் | Caste: |
| Father's Name | : ராசு | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

17.11.2025 – 03.55 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவர் எனது அக்காவின் மகன் தான். எனது அக்காவின் கணவரான இராமமூர்த்தி என்பவர் இரு சக்கர வாகனத்தை கா.விலக்கை தாண்டி ஓட்டி வந்த போது டிராக்டர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு அ.சா.1 கமுதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். கடந்த 26.02.2021ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும் செல்வம் என்பவரும் தொப்புளாக்கரை விலக்கு ரோடு அருகில் நின்று கொண்டிருந்தபோது சம்பவம் தொடர்பாக கமுதி போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். அங்கு விசாரணை செய்தார்கள். அதற்கு என்னிடம் உடன் இருந்த செல்வம் என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் அன்றைய தினம் எதற்காக சம்பவ இடம் சென்றேன் என்றால் நான் அ.சா.1ன் ஊருக்கு சென்றிருந்தேன். அ.சா.1ன் ஊரிலிருந்த என்னை கமுதி போலீசார் வந்து என்னை அழைத்துக் கொண்டு சம்பவ இடத்திற்கு

சென்றார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன விபரங்கள் இருந்தன என்று எனக்கு தெரியாது.

2. நான் கூறிய படி சம்பவ இடத்தில் வைத்து எந்த கையொப்பமும் செய்து கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கையொப்பம் செய்திருந்தால் ஆவணத்தில் என்ன விபரங்கள் இருந்தது என்று எனக்கு தெரியும் என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2025.11.17 17:33:05 +0530